Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 659/2022 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மரகதம், சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's Name | – | நடராஜ் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 13th March 2026.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present. Accused counsel present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது நெகமம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர்கள் முத்துக்குமார் மற்றும் முகமது காளிதாஸ் ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 07.05.2021ம் தேதி காலை 07.15 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு.முத்துக்குமார் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது, மயில்சாமிகவுண்டர் மகன் சுப்பிரமணியம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலையக்குற்ற எண்.139/2021, சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் **அ.சா.ஆ.3** மற்றும் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். பின்னர் வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர் அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெயராம் பிரசாத் மற்றும் ரமேஷ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே **அசாஆ.5**, மாதிரி வரைபடம் **அசாஆ.6** ஆகும்.

பின்னர் வழக்கின் எதிரியை தேடி நெகமம், கருமாபுரம் ஆகிய ஊர்களில் தேடி வந்தநிலையில் எதிரி கருமாபுரம் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அங்கு நின்று கொண்டிருந்த நபரை பிடித்து விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியவர் இறுதியில் தனது பெயர் ஜான்சன், த/பெ. வின்செண்ட் என கூறி, பின்னர் அவர் தாமாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டவரை 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து கைது செய்தும், பின்னர் அவர் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ரங்கராஜன் மற்றும் ரமேஷ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.7** ஆகும்.

பின்னர் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நெகமம் கேவிகே காம்ப்ளக்ஸில் உள்ள ராஜராஜேஷ்வரி டிரேடர்ஸ் என்ற கடைக்கு அழைத்து சென்று எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் 12.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.8** ஆகும். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் 14.00 மணிக்கு நிலையம் வந்து எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை

தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் வழக்குக் கோப்பினை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு.முகமது அவர்களின் பார்வைக்கு வைத்ததை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.9** ஆகும். பின்னர் இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிக்கெதிராக மேற்படி சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றாலும், கைப்பற்றப்பட்ட பொருளுக்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi